3. வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை Coimbatore Aanamallais Agencies Pvt.Ltd, Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம் **இ7/7831/2023**

**தீர்மான எண்.1483** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**68)** கரூர் மாநகராட்சி பகுதிகளில் சுமார் 70000 குடியிருப்புகள் மற்றும் 7000 வணிக நிறுவனங்கள் உள்ளன. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—ன் கீழ் தினசரி உருவாகும் திடக்கழிவுகளை சேகரிக்க 400 வீடுகளுக்கு ஒரு பேட்டரியால் இயங்கும் வாகனம் 1200 வீடுகளுக்கு ஒரு இலகுரக வாகனம் மற்றும் 500 வணிக நிறுவனங்களுக்கு ஒரு இலகுரக வாகனம் என்ற விகிதத்தில் தேவைப்படுகிறது. அதன் அடிப்படையில் 120 பேட்டரியால் இயங்கும் வாகனம், 19 இலகுரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பேட்டரி வாகனங்கள் 65 பழுதாகிவிட்ட காரணத்தினால் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. அதனைஈடு செய்யும் வகையில் 100% திடக்கழிவுகளை சேகரிக்கவும், தரம்பிரிக்கவும் ஏதுவாக 3 பேட்டரி வாகனத்திற்கு ஒரு இலகுரக வாகனம் வீதம் 69 பேட்டரி வாகனங்களுக்கு 23 இலகுரக வாகனம் மற்றும் வணிக நிறுவனங்கள் அதிகஅளவில் இருப்பதினால் 2 இலகுரக வாகனம் என 11 இலகுரக வாகனங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்த விலை விகிதத்தின் படி வாடகைக்கு அமர்த்தி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள மார்ச் —2023 மாதத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.8.40 இலட்சம் பொது சுகதார பணிகள் அவசரம் அவசியம் கருத்தில் கொண்டு மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி சட்ட விதி 1920 பிரிவு 15—ன் கீழ் செலவினம் தொகை ரூ.710700/— (ஏழு இலட்சத்து பத்தாயிரத்து எழுநூறு மட்டும்) அனுமதித்து மாநகராட்சி பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சிசட்ட விதி1920 பிரிவு 15–ன் கீழ்மார்ச்– 2023 மாதத்திற்கான செலவினத் ரூ.710700/– (ஏழு இலட்சத்து பத்தாயிரத்து எழுநூறு மட்டும்) பொது நிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

இ7/7831/2023

**தீர்மான எண்.1484** பதிவு செய்யப்பட்டது

**69)** கரூர் மாநகராட்சி பகுதிகளில் சுமார் 70000 குடியிருப்புகள் மற்றும் 7000 வணிக நிறுவனங்கள் உள்ளன. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ்தினசரி உருவாகும் திடக்கழிவுகளை சேகரிக்க 400 வீடுகளுக்கு ஒரு பேட்டரியால் இயங்கும் வாகனம் 1200 வீடுகளுக்கு ஒரு இலகுரக வாகனம் மற்றும் 500 வணிக நிறுவனங்களுக்கு ஒரு இலகுரக வாகனம் என்ற விகிதத்தில் தேவைப்படுகிறது. அதன் அடிப்படையில் 120 பேட்டரியால் இயங்கும் வாகனம், 19 இலகுரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பேட்டரி வாகனங்கள் 65 பழுதாகிவிட்ட காரணத்தினால் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. அதனை ஈடு செய்யும் வகையில் 100% திடக்கழிவுகளை சேகரிக்கவும், தரம்பிரிக்கவும் ஏதுவாக 3 பேட்டரி வாகனத்திற்கு ஒரு இலகுரக வாகனம் வீதம் 69 பேட்டரிவாகனங்களுக்கு 23 இலகுரகவாகனம் மற்றும் வணிக நிறுவனங்கள் அதிக அளவில் இருப்பதினால் 2 இலகுரக வாகனம் என 10 இலகுரக வாகனங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்தவிலை விகிதத்தின் படி வாடகைக்கு அமர்த்தி திடக்கழிவு மேலாண்மைபணிகள் மேற்கொள்ள மே –2023 மாதத்திற்கான உத்தேசசெலவினத் தொகை ரூ.8.37 இலட்சம் பொதுசுகதாரபணிகள் அவசரம் அவசியம் கருத்தில் கொண்டு மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதிபெற்று மாநகராட்சி பொது நிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பொது சுகாதாரபணிகளின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரியமேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் இம்மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.8.37/– (எட்டு இலட்சத்து முப்பத்தி ஏழயிரம் மட்டும்) பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. இ7/10182/2022

**தீர்மான எண்.1485** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

70) கரூர் மாநகராட்சி பகுதிகளில் சுமார் 70000 குடியிருப்புகள் மற்றும் 7000 வணிக நிறுவனங்கள் உள்ளன. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ்தினசரி உருவாகும் திடக்கழிவுகளை சேகரிக்க 400 வீடுகளுக்கு ஒரு பேட்டரியால் இயங்கும் வாகனம் 1200 வீடுகளுக்கு ஒரு இலகுரக வாகனம் மற்றும் 500 வணிக நிறுவனங்களுக்கு ஒரு இலகுரக வாகனம் என்ற விகிதத்தில் தேவைப்படுகிறது. அதன் அடிப்படையில் 120 பேட்டரியால் இயங்கும் வாகனம், 19 இலகுரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பேட்டரி வாகனங்கள் 65 பழுதாகிவிட்ட காரணத்தினால் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. அதனைஈடு செய்யும் வகையில் 100% திடக்கழிவுகளை சேகரிக்கவும், தரம்பிரிக்கவும் ஏதுவாக 3 பேட்டரி வாகனத்திற்கு ஒரு இலகுரகவாகனம் வீதம் 69 பேட்டரி வாகனங்களுக்கு 23 இலகுரக வாகனம் மற்றும் வணிக நிறுவனங்கள் அதிக அளவில் இருப்பதினால் 2 இலகுரக வாகனம் என 10 இலகுரக வாகனங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்த விலைவிகிதத்தின் படி வாடகைக்கு அமர்த்தி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஜுன்–2023 மாதத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.8.10 இலட்சம் பொது சுகதார பணிகள் அவசரம் அவசியம் கருத்தில் கொண்டு மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாநகராட்சி பொதுநிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பொது சுகாதார பணிகளின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் இம்மா மன்றம் அங்கீகரிக்கலாம்.

3) மேற்படிபணிக்கானசெலவினத் தொகை ரூ.8.10/– (எட்டுஇலட்சத்துபத்தாயிரம் மட்டும்) பொதுநிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதைமாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. இ7/10182/2022

**தீர்மான எண்.1486** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**71)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -2 வார்டு எண்.33 நஞ்சப்பன் படிக்கட்டுத் துறையில் பொதுகழிப்பிடம் அமைத்துசுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் மேற்கண்ட கழிப்பிடம் ஆண்கள் 3 எண்கள், பெண்கள் 3 எண்கள் உள்ளது. தற்பொழுது இக்கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. தற்பொழுது கழிப்பிடத்தின் சிலாப் பகுதியில் கான்கீரிட் பெயர்ந்து கம்பி தெரிகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை இடித்தி அப்புறப்படுத்தலாம். மேலும் நஞ்சப்பன் படிக்கட்டுத் துறையில் சுமார் 50 குடும்பங்கள் இக்கழிப்பிடத்தை உபயோகித்து வருகிறார்கள், இவர்களுக்கு தனிநபர் கழிப்பிடம் அமைக்க போதுமான இடவசதி இல்லை. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழைய கழிப்பிடத்தை இடித்து புதிய நவீன பொதுகழிப்பிடம்அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகைரூ.12.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/ 7924 /2023)

**தீர்மான எண்.1487** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**72)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 2ல் வார்டுஎண்.29,30,31,32,33,34,35 ஆகிய 7 வார்டுகளுக்கு நெரூர் மற்றும் மேலமாயனூர் பகுதியிலுள்ள தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து பாலம்மாள்புரம் நீரேற்று நிலையத்திலிருந்து பாலம்மாள்புரம் நீரேற்று நிலையத்தில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு அதிலிருந்து குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு அதன் வழியாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே மேற்கண்ட 7 வார்டு பகுதிகளில் அமைக்கப்பட்ட சிறுமின் விசைபம்புகளால் அவ்வப்போது குழாய்களில் ஏற்படும் பழுதுகள், குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய்களில் ஏற்படும் கசிவுகள் மற்றும் அந்தந்த பகுதிகளிலுள்ள நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் பணியின் அவசியம் கருதி உடனுக்குடன் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.15.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்

(இ2/7504 /2023).

**தீர்மான எண்.1488** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**73)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 2ல் வார்டுஎண்.20,21,22,23,24,25,26 மற்றும் 27 ஆகிய 8 வார்டுகளுக்கு நெரூர் மற்றும் மேலமாயனூர் பகுதியிலுள்ள தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து பாலம்மாள்புரம் நீரேற்று நிலையத்தில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில்

சேகரிக்கப்பட்டு அதிலிருந்து குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு அதன் வழியாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மண்டலம் -2 வார்டுஎண். 20,21,22,23,24,25,26 மற்றும் 27ல் அமைக்கப்பட்ட சிறுமின்விசை பம்புகளால் அவ்வ்வப்போது ஏற்படும் பழுதுகள், குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய்களில் ஏற்படும் கசிவுகள் மற்றும் அந்தந்த பகுதிகளிலுள்ள நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர்பணியின் அவசர அவசியம் கருதி உடனுக்குடன் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகைரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.15.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/7505 /2023).

**தீர்மான எண்.1489** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**74)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட **1** முதல் **48** வார்டு பகுதிகளில் தற்போது காய்ச்சல் பரவும் சூழ்நிலை உள்ளதாலும் அவ்வப்போது மழை பெய்வதாலும் பொதமக்களின் உடல்நலன் கருதியும் **29.04.2023** முதல் ஒவ்வொரு சனிகிழமை தோறும் "சிறப்பு சித்த மருத்துவ முகாம்" நடத்த வேண்டும் என மாவட்ட சித்தமருத்துவ அலுவலர், திருச்சிராப்பள்ளிஅவர்களின் கடிதம் ந.க.எண்.**2585**/நி**2/2023**, நாள்.**27.04.2023**ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் **29.04.2023**ம் தேதி முதல் ஒவ்வொரு சனிகிழமைகளிலும் "சிறப்பு சித்த மருத்துவமுகாம்" நடைபெறும் இம்முகாமில் கலந்து கொள்ளும் மருத்துவர்களுக்கு காலை உணவு மற்றும் தேநீர் வழங்குவதற்கும், இம்முகாமிற்கு தேவையான சாமியான பந்தல், இருக்கைகள், டேபிள், மைக்செட் அமைப்பதற்கான ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**30000/—**ல் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் பணி மேற்கொள்ளஆணையர் அவர்களால் **27.04.2023**ம் தேதியன்று முன் அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் **27.04.2023**ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது .அதன் விவரம் பின்வருமாறு

| பணியின் விபரம் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| சிறப்பு முகாமிற்கு தேவையான சாமியான பந்தல், இருக்கைகள், டேபிள், மைக்செட் அமைத்தல் மற்றும் காலை உணவு, தேநீர் வழங்குதல் | PMP மேரேஜ் சென்டர், ஆர்ட்ஸ் காலேஜ் வடபுரம், மெயின் ரோடு, தாந்தோணிமலை, கரூர். | ரூ.**25000/—** (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) |
| | குயில் ஆடியோ, அரசுகலைகல்லூரி அருகில், மெயின் ரோடு, தாந்தோணிமலை, கரூர். | ரூ.**26000/—** (ரூபாய் இருபத்து ஆறாயிரம் மட்டும்) |
| | மஞ்சு எலக்ட்ரிகல்ஸ்&பிளமிங் லேபர் ஒர்க்ஸ், வீராசவுண்ட் சர்வீஸ் &மேரேஜ் சென்டர். ஊரணி காளியம்மன் கோவில் கீழ்புரம், தென்றல் நகர், தாந்தோணிமலை, கரூர். | ரூ.**27000/—** (ரூபாய் இருபத்து ஏழாயிரம் மட்டும்) |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள PMP மேரேஜ் சென்டர், ஆர்ட்ஸ் காலேஜ் வடபுரம், மெயின் ரோடு, தாந்தோணிமலை, கரூர். நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கான செலவினத் தொகை ரூ.**25000/—**ஐ தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் அனுமதித்து

பொதுநிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **( 4298/2023/எச்1)**

**தீர்மான எண்.1490** பதிவு செய்யப்பட்டது

**75)**கரூர் மாநகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மண்டலம் **4**க்குட்ப்பட்ட வார்டு எண்.**48** மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தினுள் சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அறிவியல் பூங்கா அமைக்கும் பணியினை மேற்கொள்ள தனியார் கலந்தாலோசகர் மூலம் விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யும் பணிக்கு **26.05.2023**ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதை முடிவு செய்ய மாமன்றதின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வேலையின் மதிப்பீட்டுதொகை ரூ.**5.93** லட் சம்

| | | |
|---|---|---|
| 1 | M/s.Smart Builders Thiruppur | Rs,5.93,000/- |
| 2 | M/s.KK Construction. Thiruppur | Rs,6,15,000/- |
| 3 | M/s Urandyart Constriction, Thiruchengode | Rs,6,05,000/- |

அலுவலகக் குறிப்பு

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Smart Builders Thiruppur அவர்களின் விலைப்புள்ளியை பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்தற்குரிய மாமன்றமேயர் அவர்களின் முன் அனுமதியின் படி பணிக்கான பில்பட்டியல் தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2023).

**தீர்மான எண்.1491** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**76)**கரூர் மாநகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வார்டு எண்.**48** பழைய காவல் கண்காணிப்பாளர் ஆய்வகம் இருந்த இடத்தில் கரூர் மாவட்டத்திற்கான பணிபுரியும் பெண்களுக்காகன விடுதி கட்டும் பணிக்கு தனியார் கலந்தாலோசகர் மூலம் விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யும் பணிக்கு **26.05.2023**ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதை முடிவுசெய்ய மாமன்றதின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வேலையின் மதிப்பீட்டுதொகை ரூ.**5.00** லட் சம்

| | | |
|---|---|---|
| 1 | M/s.Smart Builders Thiruppur | Rs,5.00,000/- |
| 2 | M/s.KK Construction. Thiruppur | Rs,5,55,000/- |
| 3 | M/s Urandyart Constriction, Thiruchengode | Rs,5,50,000/- |

அலுவலகக் குறிப்பு

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Smart Builders Thiruppur அவர்களின் விலைப்புள்ளியை பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்தற்குரிய மாமன்றமேயர் அவர்களின் முன் அனுமதியின் படி பணிக்கான பில் பட்டியல் தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம் .(இ1/2023).

**தீர்மான எண்.1492** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**77)**கரூர் மாநகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மண்டலம் **–2** க்கு உட்பட்ட வார்டு எண்.**32** திருவள்ளுவர் மைதானத்தின் மேற்கு பகுதியில் இராஜலிங்கம் மன்றம் இருக்கும் இடத்தில் கரூர் மாவட்டத்திற்கான மாவட்ட மத்திய நூலகம் கட்டும பணியினை மேற்கொள்ள தனியார் கலந்தாலோசகர் மூலம் விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யும் பணிக்கு **26.05.2023 –**ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வேலையின் மதிப்பீட்டுத்தொகை ரூ.6.90 லட்சம்**

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | M/S. Smart Builders, Thirupur | ரூ. **6.90.000/–** |
| 2 | M/S. KK.Construction, Thirupur | ரூ. **7.68.000/–** |
| 3 | M/S. GrandyartConstruction,Trichy | ரூ. **7.50.000/–** |

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/S. Smart Builders, Thirupur அவர்களின் விலைப்புள்ளியை பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்றமேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிஉத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மாமன்றமேயர் அவர்களின் முன் அனுமதியின் படி பணிக்கான பில்பட்டியல் தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/ 4583 /2023)

**தீர்மான எண்.1493** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**78)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **–3** வார்டு எண்.**17**ல் செல்வநகர், LICகாலணி, முனிசிபல் காலணி உள்ளிட்ட பகுதிகளில் புதியதாக மின்பாதை அமைத்து மின்விளக்கு அமைப்பதற்கு உதவி பொறியாளர், இயக்கலும் (ம) காத்தலும், தெற்கு கரூர் (தமிழ்நாடுமின்சாரவாரியம்) அவர்களிடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு கட்டணம் ரூ.**1,31,513/–** ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டு கட்டணம் ரூ.**1,31,513/–** ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1494** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

79) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பரிச்சார்ந்த முறையில் எரியாத விளக்குகளின் விபரங்களை கண்டறிதல், எரியாத விளக்குகளின் மின் உதிரிபாகங்கள் வாங்கி பணியாளர்கள் மூலம் கம்பத்தில் எரிய வைத்தல், கண்ட்ரோல் சுவிட்சுகள் On / OFF செய்யும் பணிகள் மேற்கொள்வதற்கு 02.07.2021ம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பீட்டின் விலைவிகிதத்தில் இப்பணிகளை மேற்கொள்வதற்கு பாலாஜி எலக்ட்டீக்கல்ஸ், திருச்சி நிறுவனத்திற்கு 01.04.2023 முதல் 31.07.2023 வரை 4 மாதங்களுக்கு இம்மாமன்ற தீர்மானஎண்.1070, நாள்.28.04.2023ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தற்பொழுது இம்மாநகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சோடியம் விளக்கு, குழல்விளக்கு, CFL விளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு (SUIDF 2022-2023) 15th CFC 2022-2023 Untied Grant ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பாலாஜி எலக்ட்டீக்கல்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதியதாக வாங்கப்படும் LED விளக்குகளை தரப்பரிசோதனை செய்வதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் உள்ளது. தரப்பரிசோதனை செய்த பின்பு LED விளக்குகளை பொருத்த வேண்டி உள்ளதால் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு இதற்குமுன் பாகபராமரிப்பு பணிகளை மேற்கொண்ட நிறுவனமான பாலாஜி எலக்ட்டீக்கல்ஸ் திருச்சி அவர்களின் மூலம் மேலும் 01.08.2023 முதல் 30.11.2023 வரைபணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.38.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மாமன்றத்தின்அனுமதியைஎதிர்நோக்கிவணக்கத்திற்கரியமாமன்றமேயர் அவர்களின்முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படிபணிக்காகும் செலவினத் தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம், இ1/10042/2019

**தீர்மான எண்.1495** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**80)** கரூர் மாநகராட்சி வார்டு எண்.**1** முதல் **48** வார்டுகளுக்கு வரி மற்றும் வரியில்லாத இனங்கள் வசூல் தீவிரப்படுத்தும் பொருட்டு வரிவசூல் குறித்து விளம்பரம் செய்யவும், அதிக நிலுவைவைத்துள்ளோர் பட்டியலில்கண்டுள்ளோரிடம் வசூல்செய்யசெல்லவும், வருவாய் பிரிவில் வாகனம் ஏதும் இல்லாததால் வெளியிலிருந்து ஏதாவது தனியார் வாகனம் மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுதொகை (One day) |
|---|---|---|
| 1) | சுபம் டிராவல்ஸ் 570/1, சேலம் மெயின் ரோடு, வெங்கமேடு, கரூர் | 2350/- |
| 2) | தமிழ் டிராவல்ஸ், 25 அம்மன் நகர் 2வது கிராஸ், வி.வி.4 நகர் வெங்கமேடு அஞ்சல், கரூர் | 2600/- |

| | | |
|---|---|---|
| 3) | The Karur Cabs, 34, Ganapathipalayam North, Thanthonimalai | 2700/- |

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் **1920** விதி எண்.**15**ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **சுபம் டிராவல்ஸ் 570/1, சேலம் மெயின் ரோடு, வெங்கமேடு, கரூர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுவேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவுசெய்யலாம். இ1/2310/2023

**தீர்மான எண்.1496** பதிவு செய்யப்பட்டது.

81) திருமதி. R.புவனேஸ்வரி, 29வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

29வார்டுக்குட்பட்ட இராமனுஜம் நகர் தெற்கு பகுதியில் உள்ள குகன் மருத்துவமனை முதல் வி.கே.ஏ அப்பார்ட்மெண்ட் வரை உள்ள சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதாலும் வேலைக்கு செல்லும் நபர்களை ஏற்றி செல்லும் வாகனம் மற்றும் பள்ளி குழந்தைகள் வாகனங்கள் அதிகம் செல்வதால் அந்த சாலையானது மிகவும் முக்கியத்துவம் உள்ளதாக இருப்பதால் அதனை புதிய தார் சாலையாக அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1497** திருமதி. R.புவனேஸ்வரி அவர்கள் **29**வது வார்டு மாமன்ற உறுப்பினர் தாம் முன்மொழிந்து திருமதி.சி.யசோதா **30**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

82) திருமதி.R.புவனேஸ்வரி, 29வது மாமன்ற உறுப்பினர் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

வக்கீல் நல்லுசாமி வீடு முதல் கறிக்கடை வரை டீச்சர்ஸ் காலனி சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்கு மிகவும் இடையூராக உள்ளது. ஆகையால் புதிதாக தார்சாலை அமைக்கவும் மேலும் ஆல்வின் நகர் பகுதியில் அப்போலா மருத்துவமனை, ரெசிடென்சி, என்.டி.எஸ்.பேலஸ் போன்ற பெரிய நிறுவனங்களிலிருந்து வெளி வரும் கழிவுநீர், வீடுகள் நிறைந்த பகுதி வழியாக செல்வதால் பொதுமக்களுக்கு மிகவும் பாதிப்பாக உள்ளது. ஆகையால் அங்கு பாதாள சாக்கடைஅமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1498** திருமதி. R.புவனேஸ்வரி அவர்கள் **29**வது வார்டு மாமன்ற உறுப்பினர் தாம் முன்மொழிந்து திருமதி.சி.யசோதா **30**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

83) திரு.M.ரமேஷ் 26வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

1. பெரியார் நகர் 1வது கிராஸ் (கன்னிமார் கோவில் அருகில்)
2. கணேசா நகர் வடக்கு
3. காமராஜபுரம் மேற்கு (அரிமா டெக்ஸ் சந்து)
4. காமராஜபுரம் கிழக்கு (விஸ்வாஸ் டெக்ஸ்முன்பு)

மேற்கண்ட பகுதிகளில் வார்டு பகுதி பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று புதிய மின் வழித்தடமும், புதிய மின் விளக்குகளும் அமைத்துதருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1499** திரு.எம்.ரமேஷ் **26**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ர.தேவி **27**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

84) திரு.இரா.வேலுசாமி 48வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சியின் 48வது வார்டுக்குட்பட்ட வெங்கல்பட்டியின் திருமா நகரில் ஏற்கனவே ஒரு ஆழ்குழாய்கிணறு அமைத்து மூடி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருப்பதால் ஆழ்குழாய் கிணற்றில் மின்மோட்டார் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் ஒன்று அமைத்தால் குடிநீர்பற்றாக்குறை அந்த தெரு மற்றும் பக்கத்து தெருக்களுக்கு வசதியாக அமையும், எனவே மோட்டார் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் ஒன்றை அமைத்துதருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1500** திரு.இரா.வேலுசாமி **48**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.பொ.பழனிச்சாமி **47**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

85) திரு.இரா.வேலுசாமி 48வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

நமது மாநகராட்சிக்குட்பட்ட 48 வது வார்டு வெங்கல்பட்டியில் ஆதிதிராவிடர் தெருவில் கோவில் பின்புறம் அர்ச்சுணன் வீட்டில் இருந்து தெற்கு முகமாக கேத்தா நாயக்கர் வீடு வரை உள்ள பாதையில் ஒரு மின்கம்பம் அமைத்துஅதற்கு ஒரு தெருவிளக்கும், வி.சி.நகர் தங்கராசு வீட்டிலிருந்து சங்கிலி வீடுவரை தெற்கு முகமாக ஒருமின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்துதருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1501** திரு.இரா.வேலுசாமி **48**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.பொ.பழனிச்சாமி **47**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

86) திரு.M.பாண்டியன் 5வதுமாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

கரூர் வெங்கமேடு 5வது வார்டு பகுதியில் அமைந்துள்ள எம்,கே.நகர் 1வது கிராஸ், 3வது கிராஸ், எஸ்.பி.காலனி 2வது கிராஸ், கொங்குநகர் 3வது கிராஸ், அம்மன் நகர் 2வது தெருவில் இருக்கும் 2வது கிராஸ் ஆகிய பகுதிகளில் இருக்கும் மொத்த 5 பாலங்கள் பழுதடைந்து உள்ளதால் சாக்கடை தண்ணீர் வடிகாலில் நிரம்பி சாலைகளில் ஓடுவதால் பொதுமக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூராக உள்ளது. பழுதடைந்துள்ள பாலங்களை அப்புறப்படுத்திவிட்டு புதியபாலங்களை அமைத்துதருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1502** திரு. M.பாண்டியன் **5**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.செ.மாரியம்மாள் **6**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

87) திரு.M.பாண்டியன் 5வதுமாமன்ற உறுப்பினர்அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

கரூர் மாநகராட்சி, வெங்கமேடு, 5வது வார்டு பகுதியில் அமைந்துள்ள ராஜ் நகர் மற்றும் எஸ்.எஸ்.கார்டன் ஆகிய இருபகுதிகளிலும் குடிநீர் வசதி தருவதற்கு 500 மீட்டர் 4 இன்ஞ்குழாய்

அமைத்து ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1503** திரு. M.பாண்டியன் **5**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.செ.மாரியம்மாள் **6**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

88) திரு.M.பாண்டியன் 05வது மாமன்றஉறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வெங்கமேடு வார்டு-5 மற்றும் வார்டு-6 ஆகிய பகுதிகளில் 2011ம் ஆண்டு தியாகராஜன் என்பவரால் பொது நல வழக்குஎண்.2895/2011 வழக்கு தொடரப்பட்டது. அதை தொடர்ந்து அந்த வழக்கில் 2016ம் ஆண்டு மதுரை நீதிமன்றத்தால் இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டது. அதனால் கரூர் மாநகராட்சி நிர்வாகம் அந்தபகுதி மக்களுக்கு அடிப்படை வசதியான பத்திர பதிவு, மின்சார இணைப்பு, பிளான் அப்ரூவல், வீட்டுவரி, குடிநீர்வரி, பாதாளசாக்கடை வரி போன்ற வசதிகளை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக அந்த வழக்கின் தீர்ப்பு 26.06.2023 அன்று மதுரை நீதிமன்றத்தால் தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவரால் 2016ல் ஆய்வு செய்து அந்த 12.97 ஏக்கர் பொது இடத்தை கண்டறியப்பட்டு மதுரை நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. அதை தொடர்ந்து 2022ம் ஆண்டு கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களால் ஆய்வுசெய்து 12.97 ஏக்கரா பொது இடத்தை மதுரை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மேலே குறிப்பிட்டுள்ள இந்த இரண்டு அலுவலகமும் ஆய்வு செய்து ஒப்படைக்கப்பட்ட பொது இடம் 12.97 ஏக்கரா ஒன்று என்பது தெரியவருகிறது. அதனால் இந்த வழக்கு மதுரை நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது. அதனால் கரூர் மாநகராட்சி நிர்வாகம் மீதமுள்ள 117 ஏக்கரா மனை பிரிவின் வீடுகள் அந்த பகுதி மக்களின் நலன் கருதி அடிப்டை தேவைகளான பத்திர பதிவு, மின்சார இணைப்பு, பிளான் அப்ரூவல், வீட்டுவரி, குடிநீர்வரி, பாதாளசாக்கடை வரிபோன்ற தேவைகளை செய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1504** திரு. M.பாண்டியன் **5**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.செ.மாரியம்மாள் **6**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

89) திரு.M.பாண்டியன் 05வதுமாமன்ற உறுப்பினர்அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

கரூர் மாநகராட்சி வெங்கமேடு 5வது வார்டு பகுதியில் இருக்கும் 1) லெட்சுமி நகர், 2) ராஜ் கார்டன், 3) கண்ணா கார்டன், 4) கொங்கு நகர் பகுதியில் அமைந்திருக்கும் அம்மன் நகர் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் புதியதாக 15 மின்கம்பங்கள் அமைத்தும், ஏற்கனவே அமைந்துள்ள 15 மின்கம்பங்களுக்கு LED பல்பும் ஆகமொத்து 15 மின்கம்பங்களும், 30 LED பல்புகளும் அமைத்துதருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1505** திரு. M.பாண்டியன் **5**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.செ.மாரியம்மாள் **6**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

90) திரு.M.சரவணன் 01வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 சின்னகோதுர் நீலம் கார்டன் பகுதியில் நீண்ட காலமாக தார்சாலை வசதி இல்லாத காரணத்தினால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமபடுகிறார்கள். எனவே அப்பகுதியில் புதிய தார் சாலை அமைக்கவும், சின்னகோதுர் பிள்ளையார் கோவில் பின்புறம் மண்சாலையாக உள்ளதை அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி சிமெண்ட்சாலை அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1506** திரு.M.சரவணன் **01**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.க.வடிவேல்அரசு **2**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

91) திருமதி.சரஸ்வதி கதிர்வேல், 40வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட 40வது வார்டு வி.வி.ஜி கார்டனில் இருந்து ஏமூர் சாலை வரை மண்சாலையை தார் சாலையாக போர் கால அடிப்படையில் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1507** திருமதி.க.சரஸ்வதி **40**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.மா.தண்டபானி **41**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

92) திருமதி .சரஸ்வதி கதிர்வேல், 40வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட 40வது வார்டு 1) சக்தி நகர், 2) 1-ம் நம்பர் டவர்லைன், 3) கே.கே நகர் 4) சிவாஜி நகர், 5) இந்திரா நகர், 6) வள்ளலார் கோவில் தெரு, 7) வீ.வீ.ஜி கார்டன் 1, 2, மற்றும் 3வது தெரு, 8) மசூதி தெரு, 9) ராஜா நகர் இவை அனைத்து இடங்களுக்கும் லைன் இழுத்து லைட் பொருத்தி தெரு விளக்கு அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1508** திருமதி.க.சரஸ்வதி **40**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.மா.தண்டபானி **41**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

93) திருமதி.S.யசோதா தனபாபு 30-வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட 30-வது வார்டு அண்ணா நகர் 4வது குறுக்கு தெரு மற்றும் அண்ணா நகர் 3,4 மற்றும் 5-ற்கு தென்வடல் சாலையில் மழைநீர் வடிகால் (One Side) மட்டும் சரி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ஏனெனில் இந்த வடிகால் மகவும் மோசமான நிலையில் சாக்கடை நீர் வெளியேற இயலாமல் தேங்கியே உள்ளது. இதனால் மிகுந்த சுகாதாரகேடு ஏற்படுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். எனவே இந்தவடிகாலை நீரமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1509** திருமதி.சி.யசோதா **30**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.பா.சாந்தி **31**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

94) திருமதி. இந்திராணி பரமசிவம், 35வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட 35வது வார்டு பாபா கோவில் தெரு மற்றும் அண்ணாச்சி தெருவில் உள்ள உப்புநீர் போர்மோட்டார் மற்றும் பைப் லைன் சரிசெய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்

**தீர்மான எண்.1510** திருமதி.இந்திராணி **35**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.பி.வசுமதி **36**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

95) திருமதி.வெ.நந்தினி, 21வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

1) ஜவஹர் பஜாரில் உள்ள பொரிகடை 2ன் மற்றும் SPN நடேசன் புக் ஷாப் லைனில் இருந்து கிழக்கே வா.ஊ.சி தெரு கார்னர் வரை இருபுறமும் சாக்கடை மிகவும் மோசமடைந்து இடிந்துள்ளதால் ஆங்காங்கே நீர் தேங்கி சுகாதார சீர்கேடாகிறது எதிர் வரும் மழை காலங்களை சமாளிக்க இருபுறமும் சாக்கடை வசதி புதிதாக கட்டி தரவும்,

2) சாத்தானி சந்தில் உள்ள சாக்கடையையும் கட்டி தரவும்.

3) GTS ஸ்கூல் முன்புறம் உள்ள சின்டெக்ஸ், ஜவஹர் பஜாரில் உள்ள சின்டெக்ஸ், நஞ்சையா தெருவில் உள்ள சின்டெக்ஸ் ஆகியவற்றின் சுற்று சுவர் இடிந்து விழும் நிலையில் உள்ளதால் சுற்றுச் சுவரை கட்டித் தரவும்.

4) கிழக்கு நஞ்சைய தெரு, வீரபத்திர சந்து மற்றும் வெங்கடாசலம் சந்து ஆகியவற்றிற்கு செல்லும் பைப்லைனில் சாக்கடை நீர்கலந்து வருவதால் புதிதாக பைப்லைன் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்

**தீர்மான எண்.1511** திருமதி.வெ.நந்தினி **21**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ச.பிரேமா **22**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

96) திருமதி.R.தெய்வானை, 34வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

1. 34வது வார்டுக்குட்பட்ட பண்டரிநாதன் கோவில் தெருவில் அமைந்துள்ள பண்டரிநாதன் ஆலயத்திற்கு முன்புறம் பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் நலன் கருதி ஆலயத்திற்கு முன்புறம் நிரந்தர கொட்டகை அமைக்க அனுமதி அளிக்கவும்.
2. மக்கள் பாதையில் புதிதாக மழைநீர் வடிகால் அமைத்து தரவும்.
3. கிட்டு தெரு, கீரைக்கார தெருவில் சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்துள்ளதை புதிதாக மாற்றிதரவும்.
4. திண்டுக்கல் ரோடு பகுதியில் ருசி பிரியாணி கடை அருகில் மழை காலங்களில் மழைநீர் தேங்கி ரோடு முழுவதும் செல்வதால் புதிய வடிகால் பாலம் அமைத்து தரவும்.
5. சுந்தரவிலாஸ் சந்தில் புதியதாக சிமெண்ட் ரோடு அமைத்து தரவும்.
6. கிட்டு தெரு இரட்டை வாய்க்கால் அருகில் உள்ள தெருவில் சிமெண்ட் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை புதியசாலை அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்

**தீர்மான எண்.1512** திருமதி.ரா.தெய்வாணை **34**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.இந்திராணி **35**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

97) திரு.ச.சக்திவேல் 03வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

மண்டலம் எண். 1-க்குட்பட்ட வார்டு எண். 03ல் அமைந்துள்ள அரசு பள்ளியில் மாணவர்களுக்காக பொது கழிப்பிடத்தை புதுபித்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்

**தீர்மான எண்.1513** திரு.ச.சக்திவேல் **1**வது மண்டல தலைவர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.க.வடிவேல்அரசு **02**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

மேயர்
கரூர் மாநகராட்சி